**03.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

## எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் 330 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மெட்ரோ நிலையங்கள் மற்றும் கோயம்பேடு பணிமனையில் சூரிய சக்தியை பயன்படுத்தி 5.5 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்தக் கொள்ளளவு 5.5 மெகாவாட் ஆகும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கூடுதலாக எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தின் கூரை மேல் 330 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இதுவரை மொத்தம் 5.83 மெகாவாட் திறன் கொண்ட சூரியசக்தி மின் உற்பத்தி செய்துள்ளது.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் 8 மெகா வாட் சூரியசக்தி மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன் பின்னர் ஆண்டுதோறும் 1,16,80,000 யூனிட் மின் உற்பத்தி செய்யப்படும். இதனால் ஆண்டிற்கு ரூ.2.54 கோடி சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இதனால் வெளிவரும் கரியமிள வாயுவின் வெளியீடு அளவு ஆண்டிற்கு 11,587 டன் ஆகக் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.